# 4. ஆடுவோமே...

### அலகு அறிமுகம்

கலையும் பண்பாடும் நமது நாகரிக வளர்ச்சியைக் காட்டுகின்றன. பண்பாட்டின் சின்னமாகத் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இவற்றைப் பொதுவாக அமைகின்ற திருவிழாக்கள் என்றும், நாம் வாழும் ஊரை மையமாகக் கொண்ட ஊர்மக்களின் சமூக ஒற்றுமையையும், மனமகிழ்ச்சியையும் நோக்கமாகக் கொண்டவை எனவும் பிரிக்கலாம்.

இத்திருவிழாக்களில் நாட்டுப்புறக் கலைகள் இடம் பெறுகின்றன. இவை நமது பண்பாடு சார்ந்த கலைகளாகும். இக்கலைகளைப் பாதுகாத்து, இளைய தலைமுறையினருக்கு அறிமுகம் செய்வதும் அவசிமாகும்.

பல்வேறு கலைகளைக் குறித்த கருத்துகள் இந்த அலகில் இடம் பெற்றுள்ளன. திருவிழா நிகழ்ச்சிகள் மற்றும் விழாவில் நடைபெறும் கலைகளைப் பற்றி அறிதலும் ஒவ்வொரு திருவிழாவிற்கும் தனிச்சிறப்புண்டு என்பதை புரிந்து கொள்ளுதலும். இவ்வலகின் முக்கிய நோக்கங்களாகும்.

**இவ்வலகில் மூன்று துணை அலகுகள் உள்ளன.**

- எங்கள் ஊர்த்திருவிழா (பாடல்).
- மனசுல தெம்பு (கலைகள்).
- எனக்கும் பெருமைதான் (கட்டுரை).

### முதன்மைக் கற்றல் அடைவுகள்

- கவிதையை வாசித்து மெட்டமைக்கிறார்கள்.
- நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி விளக்கிக் கூறுகிறார்கள்.
- வர்ணனைச் சொற்கள். தொடர்கள் உருவாக்குகிறார்கள்.
- திருவிழா / பண்டிகைளுக்குத் தனிச்சிறப்புண்டு என்பதை அறிகிறார்கள்.
- விழாக்களும், கலைகளும் பண்பாட்டோடு தொடர்புடையவை என அறிகிறார்கள்.
- தகுந்த சொற்கள், சொற்றொடர்களைப் பயன்படுத்திக் கவிதைப் படைக்கிறார்கள்.

# அலகு வலைச்சட்டம்

| கருத்துகள் / திறன்கள் | கற்றல் செயல்பாடுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • திருவிழா பற்றிய கவிதையை வாசிக்கவும், ரசிக்கவும் செய்தல்.<br>• திருவிழாக் காட்சிகளைக் குறித்த கருத்துகளைப் புரிதல்.<br>• கவிதையில் வர்ணனைச் சொற்களை இனம் கண்டு எழுதி வெளியிடுதல்.<br>• கவிதை, பத்திரிக்கைச் செய்திகள் வாயிலாகத் விழாக்களின் சிறப்புகளை அறிதல்.<br>• பத்திரிக்கைச் செய்தி, கவிதை, வாயிலாகப் பல்வேறு கலைகள் நம் நாட்டின் பண்பாட்டோடு தொடர்புடையவை என அறிதல்<br>• மொழிக் கூறுகளைப் பற்றி அறிதல். | • காட்சி விளக்கம் கூறுதல்.<br>• நிகழ்ச்சி எழுதுதல்.<br>• வர்ணனைத் தொடர்கள் எழுதுதல்.<br>• படவிளக்கம் எழுதுதல்.<br>• கருத்து கூறுதல்.<br>• மொழிச் செயல்பாட்டில் ஈடுபடுதல். | • கவிதையை மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.<br>• பார்த்து, ரசித்த திருவிழாக்காட்சியினை வரிசைப்படுத்தி, விளக்கிக் கூறுகிறார்கள்.<br>• கருத்துத் தெளிவுடன் சுருக்கமாக அமையப்பெற்றதே வர்ணனைச் சொற்கள் எனப் புரிந்து கொள்கிறார்கள்.<br>• ஒவ்வொரு விழாவிற்கும் தனிச் சிறப்பு உண்டு என்பதைப் புரிந்து கொள்கிறார்கள்.<br>• புதிய சொற்கள், சொற்றொடர்கள், பயன்படுத்திக் கவிதை படைக்கிறார்கள்.<br>• பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் உருவாக்குகிறார்கள். |



**இந்த அலகில் உள்ள பாடப்பகுதிகளும் செயல்பாடுகளும் முற்றுப்பெற சுமார் 20 பிரிவேளைகள் தேவைப்படலாம்.**

**கற்றல் துணைக்கருவிகள்**

- திருவிழாப் படங்கள்
- பத்திரிக்கைச் செய்திகள்
- குறுந்தகடுகள் (கலை)
- பண்டிகைகளின் படங்கள்

## எங்கள் ஊர்த் திருவிழா

**வகுப்பறையில்**

நீங்கள் என்னென்ன திருவிழாக்கள் பார்த்திருக்கிறீர்கள்? என்று ஆசிரியர் கேட்கலாம்.

- **விழாக்களில் இசைக்கப்படும் கருவிகள் யாவை?**
- **என்னென்ன வகையான ஆடைகளை அணிவீர்கள்?**
- **உண்ணும் உணவு வகைகள் யாவை?**
- **ஊர்களின் பெயர்களில் அமையப் பெற்றத் திருவிழாக்கள் யாவை?**

போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடலாம்.

- பின்னர் சொற்சூரியன் வரைந்து குழைந்தைகளை நிரப்பச் செய்யுங்கள்.




E-TEXT

**கலைவிழா, திருவிழா தொடர்பான குறுந்தகடுகள் காண்பித்து அவற்றைக் குறித்துக் கலந்துரையாடி மூலம் வகுப்பு தொடங்கப்பட வேண்டும்.**

- சொற்சூரியனைப் பூர்த்தி செய்த பின், எழுதிய சொற்களை வைத்துப் புதிய தொடர்கள் உருவாக்கச் சொல்லலாமே.

**எகா புத்தாடை அணிதல்**
**மேளதாளம் அடித்தல்**

- தொடர்கள் உருவாக்கியபின், இதே போன்ற நிகழ்ச்சிகள், நமது பாடப்பகுதியில் பாடலாகக் கொடுக்கப்பட்டுள்ளன. பாடலைப் பாடுவோமா? என்று கேட்டுப் பாடப்பகுதிக்குள் நுழையலாம்.



## பாடி மகிழுங்கள்

திருவிழாப் பாடலை இராக, தாள, பாவனையுடன் பாடச் சொல்லுங்கள். புதிய மெட்டுகள் அமைத்துப் பாடச் செய்யுங்கள். தனியாகவும், குழுவாகவும் பாடச் செய்து மதிப்பீடு செய்யுங்கள்.

**சிறப்புக் கவனம் தேவைப்படும்**

**மாணவர்களுக்குச் செய்கைப் பாடலாக பாட உதவி செய்யுங்கள்.**



## திருவிழாக் காட்சி கூறுங்கள்

“நீங்களும் பல்வேறு திருவிழாக்களைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா! அவற்றைப் பற்றிக் கூறுங்களேன்.” என்று குழந்தைகளிடம் கேட்கலாம்.

- ஒவ்வொருவரும் பார்த்த காட்சிகளைக் கூறச் செய்தல்.
- அவற்றைக் கரும்பலகையில் எழுதுவீர்களல்லவா?
- மாணவர்களிடம் வாசிக்கச் சொல்லுங்கள்.
- ஆசிரியர் உதவியுடன் மேம்படுத்தட்டும்.
- மாணவர்களைக் குறிப்பேட்டில் எழுதச் செய்யுங்கள்.
- படைப்புத் தொகுப்பில் சேர்த்துக்கொள்ள மறக்க வேண்டாம்.

**தொடர் மதிப்பீடு**

- கருத்துத் தெளிவுடன் கூறுதல்.
- வரிசைப்படுத்திக் கூறுதல்.
- சரியான உச்சரிப்புடன் கூறுதல்.
- ஆசிரியர் உதவியுடன் கூறுதல்.



## நிகழ்ச்சி எழுதுங்கள்

- தனிநபர் / குழுச் செயல்பாடாக நடத்துதல்.
- குழைந்தைகளிடம் குறிப்புகள் கொடுத்து, நிகழ்ச்சிகளைக் கூறச் செய்தல்.
- குழுவில் தான் கூறிய நிகழ்ச்சிகளைப் பங்கு வைத்தல்.
- ஒவ்வொருவரின் பங்கையும் ஆசிரியர் உறுதி செய்தல்.
- குழுவாக மேம்படுத்தி வெளியிடல்.
- நிகழ்ச்சியை வரிசைப்படுத்தி மதிப்பிடுதல்.
- ஒவ்வொரு குழுவும் வெளியிடும் போது பிறகுழுக்கள் மதிப்பிடுதல்.
- குழுவில் கூறிய சிறந்த கருத்துகளைக் கரும்பலகையில் எழுதுதல்.
- குழந்தைகள் தாங்கள் எழுதியதை மேம்படுத்திக் குறிப்பேட்டில் பதிவு செய்தல்.
- படைப்புத் தொகுப்பில் பதிவு செய்தல்.



## சொல்லை மாற்றி எழுதுங்கள்

தடித்த சொற்களை மாதிரியைப் போன்று எடுத்து எழுதச் சொல்லுங்கள்.

- எழுதியதை வகுப்பில் வெளியிடுங்கள்.
- மாணவர்களைக் குறிப்பேட்டில் பதிவு செய்ய வைத்தல்

**கேட்கலாம், மகிழலாம்**
**கொள்ளலாம், கொடுக்கலாம்,**
**சுற்றலாம்**

**தொடர் செயல்பாடு**

- வாகனத்தில் பயணம் **(செல்)**
- ஓணஊஞ்சல் **(ஆடு)**
- காலையில் காப்பி **(குடி)**
- தினமும் கடவுளை **(வணங்கு)**
- பெரியவர் சொல்லை **(மதி)**

**செல்லலாம்**
**ஆடலாம்**
**குடிக்கலாம்**
**வணங்கலாம்**
**மதிக்கலாம்**

இதுபோன்று செயல்பாடுகளை ஆசிரியர் உருவாக்கிக் குழந்தைகளை வீட்டுப்பாடமாக எழுதி வரச் செய்யலாம்.

**நிகழ்ச்சி எழுதுங்கள்**

- குழுக்களாதல் **(மேளதாளம், கொம்பொலி, வண்ணஜாலம், வானவெடி** போன்று பெயரிடலாம்)
- இவ்வாறு குழுவிற்குக் கொடுக்கப்பட்ட பெயர்களின் அடிப்படையில் குறிப்புகள் எழுதுதல்.
- எழுதிய குறிப்புகளைக் குழுத் தலைவர் வெளியிடல்.
- கருத்துகளை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்.
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்.
- ஆசிரியர் தமது படைப்பை வெளியிடல்.
- குழைந்தைகள் மேம்படுத்தி எழுதுதல்.
- படைப்புத் தொகுப்பில் பதிவு செய்தல்.

- திருவிழாவில் **மேளதாளம்** அடித்தார்கள்.
- **கொம்பொலியின்** சத்தம் காதைப் பிளந்தது.
- தோரணங்கள் **வண்ண ஜாலமாய்** காட்சியளித்தன.
- **வாணவேடிக்கை** காதைப் பிளந்தது.
- கடைகளில் **தித்திக்கும்** பலகாரங்கள் விற்கப்பட்டன.

**தொடர் மதிப்பீடு**

- கருத்துகள் மாறாமல் எழுதுதல்.
- வாக்கிய அமைப்பு.
- பிழையின்றி எழுதுதல்.
- வரிசைப்படுத்துதல்.



## கண்டுபிடித்து எழுதுங்கள்

- குழந்தைகள் கோடிட்ட சொற்களுக்கு இணையான சொற்களைப் பாடப்பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதட்டும்.

பவனி
வடம்
மகிழ்ச்சி
வேடிக்கை
கவரும்



## வருணித்து எழுதுங்கள்

- செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கு அடைமொழி சேர்த்து எழுதச் சொல்லலாம்.

**திருவிழா**

தேர்த் திருவிழா
வண்ணத் திருவிழா
தித்திக்கும் திருவிழா
மாமாங்கத் திருவிழா

**ஆடை**

புத்தாடை
வண்ண ஆடை
கண்கவர் ஆடை
பட்டாடை

**பலூன்**

அழகிய பலூன்
வண்ணப் பலூன்
பறக்கும் பலூன்
கண் கவர் பலூன்

**தேர்**

பவனி வரும் தேர்
ஆடி வரும் தேர்
அசைந்து வரும் தேர்
உருண்டு வரும் தேர்

- இதுபோன்ற அடைமொழிச் சொற்கள் உருவாக்கி எழுதி வரச் சொல்லுங்கள்

| தொடர் மதிப்பீடு | |
|---|---|
| | • வருணனைச் சொற்கள் எழுதியுள்ளனர்.<br>• முழுமையான கருத்து உள்ளது.<br>• பொருத்தமான சொற்கள் பயன்படுத்தியுள்ளனர். |



## கண்டு பிடியுங்கள்

- பாடப்புத்தகத்தில் உள்ள படங்களைப் பார்த்து வேறுபாடுகளைக் கண்டுபிடித்துக் குறிப்பேட்டில் பதிவு செய்யக் கூறுங்கள்.
- வேறுபாடு கண்டறிந்த பின் படத்தை வரைந்து வண்ணம் தீட்டச் சொல்லுங்கள்.

**தொடர் செயல்பாடு**

இதே போன்ற படங்களை மாத/வார இதழ்களிலிருந்து திரட்டி வரச் செய்து வேறுபாடு காணச் செய்தல்.

**வளப்பகுதி**

### திருவிழா

எங்கள் ஊர்த்திருவிழா!
எல்லோருக்கும் பெருவிழா!
சிங்க வாகனம் வருகுது.
சீன வெடி வெடிக்குது.
கூட்டம் எங்கும் திரளுது.
ஆட்ட மெல்லாம் நடக்குது.
ராட்டினமும் சுற்றுது.
ராகம் தாளம் கேட்குது.
வண்ணப் பலூன் பறக்குது.
கண்ணை யெல்லாம் பறித்திடும்.
காட்சி யெல்லாம் சிறக்குது.
மேள வாத்தியம் முழங்குது.
ஜால வித்தை நடக்குது.
நாளும் விழா இருந்திட்டால்.
நாங்கள் பாடி ஆடுவோம்.

### தீபாவளி

புத்தம் புதிய சட்டையினைப்
போட்டுக் கொள்ளலாம்.
விதவிதமாய்ப் பண்டமுடன்
விருந்து உண்ணலாம்.
வரிசையாக விளக்குகளை
ஏற்றி வைக்கலாம்.
பரிசுகளைப் பெற்றோரிடம்
பெற்று மகிழலாம்.
வேட்டு வைத்து மாமாலை
ஆட்டங் காட்டலாம்.
கோட்டு சூட்டு மாட்டி விட்டு
பாட்டு பாடலாம்.
மத்தாப்பினைக் கொளுத்தியே
மகிழ்வு கொள்ளலாம்.
நித்தமொரு தீபாவளி
இருந்தால் நல்லதாம்.

**பி.வி.கிரி**

### மனசுல தெம்பு

- பாடப்பகுதியில் இரண்டு கலைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து அறிந்து கொள்வோமா? எனக் கூறிப் பாடப்புத்தகத்திற்குச் செல்லலாமல்லவா?

  - தனிநபராக வாசிக்கச் செய்தல்.
  - வாசித்துப் புரிந்த கருத்துகளைப் பதிவு செய்தல்.
  - குழுபிரிதல் (கலைகள்).
  - கலந்துரையாடி மேம்படுத்துதல்.
  - மேம்படுத்தியதைக் குழுவில் வெளியிடுதல்.
  - ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்.
  - குழந்தைகள் மேம்படுத்துதல்.
  - குறிப்பேட்டில் பதிவு செய்து படைப்புத் தொகுப்பில் சேர்த்தல்.



## பெயர்கள் எழுதுங்கள்

கலைகளின் பெயர்களை வைத்துக் குழுவாதல். **(பொய்க்கால்குதிரை, கோலாட்டம், கதைகளி, கும்மிப்பாட்டு)**

- இவற்றைக் குறித்து ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடி எழுதச் செய்யலாம்.
- எழுதியதைக் குழுவில் வெளியிடல்.
- பிற குழுக்கள் மதிப்பிடுதல்.
- மேம்படுத்துதல்.
- மேம்படுத்தியதைப் படைப்புத் தொகுப்பில் சேர்த்தல்.



## சொற்கோபுரம் அமையுங்கள்

திருவிழாக் காட்சிகளை எழுதியுள்ளார்கள். அவற்றிலிருந்து சில சொற்கள் நமது செயல்பாட்டிலும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டறிந்து சொற்கோபுரம் அமைக்கச் சொல்லுங்கள்.

ஓர் எழுத்துச் சொல்
இரண்டு எழுத்துச் சொல்
மூன்றெழுத்துச் சொல்
நான்கெழுத்துச் சொல்
ஐந்தெழுத்துச் சொல்

| | | | | |
|---|---|---|---|---|
| தீ | | | | |
| தே | ர் | | | |
| ஓ | ண | ம் | | |
| பொ | ங் | க | ல் | |
| ஊ | ர் | வ | ல | ம் |

இதே போன்ற செயல்பாடுகளைச் சேகரித்துக் குழந்தைகளை எழுதி வரச் சொல்லுங்கள்.

## எனக்கும் பெருமைதான்

### உழைப்பின் அருமை

பொங்கல் படைத்து வண்ணம் தீட்டி
போற்றி மகிழுவார் - மாந்தர்
குடும்பமாக கும்பிட்டே அகம்
குளிரச் செய்வார்.

காளைகள் பூட்டிக் கலப்பைகள் ஓட்டி
கால்கள் செல்லுமே! உழவர்
கைகள் உழைத்து விதைத்ததை
அறுவடைக் காலம் சொல்லுமே,

நாளும் இதுவே உலகின் இயல்பு
நடைமுறை ஆகுமே! என்றும்
நாமும் உழைத்தால் நன்மைகள் பெருகும்
நாடும் செழிக்குமே!

- இந்தப் பாடலை ஆசிரியர் இராகத்துடன் பாடவேண்டும். குழந்தைகளும் சேர்ந்து பாடிய பின், இப்பாடலில் உள்ள கருத்துகள்தான் நமது பாடப்பகுதியில் கதையாகக் கொடுக்கப் பட்டுள்ளது என்று கூறிப் பாடப்பகுதியை வாசிக்கச் செய்யலாம்.
- பாடப்பகுதியை நடத்தும் பொழுது ஆசிரியர் வாசிப்பு உத்திகளைக் கையாள வேண்டும்.
- குழந்தைகள் நன்றாக வாசிக்கட்டும்.
- கருத்துகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்தல்.
- குழுவாகக் கலந்துரையாடுதல், கருத்துகளை மேம்படுத்தல்.
- குழுவில் வெளியிடல்.
- குறிப்பேட்டில் பதிவு செய்தல்.

**பொங்கல்**

**போகிப் பண்டிகை, தைப்பொங்கல்,**
**மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல்**

### தொடர் எழுதுங்கள்

மாதிரியைப் போன்று குழந்தைகளைத் தொடர்கள் உருவாக்கச் சொல்லுங்கள்



## எழுதுங்கள்

- குழுபிரித்தல் (குழுபிரித்தல் உத்தியைக் கையாளுதல்)
- குழுக்கள் மாட்டுப் பொங்கலைப் பற்றி வரிசையாக எழுதட்டும்.
- அனைவரின் பங்களிப்பையும் உறுதி செய்ய வேண்டும்.
- எழுதியதைக் குழுக்கள் வகுப்பில் வெளியிடட்டும்.
- பிற குழுக்கள் மதிப்பிடட்டும்.
- மேம்படுத்தி குழந்தைகள் வெளியிடட்டும்.
- ஆசிரியர்தம் படைப்பையும் வெளியிடலாம்.
- குழந்தைகள் மேம்படுத்தி படைப்புத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளுதல்.

**தொடர் செயல்பாடு**

உங்களது பள்ளியில் கொண்டாடிய சுதந்திர தின விழாவைப் பற்றி எழுதி வரச் சொல்லுங்கள்.

**தொடர் மதிப்பீடு**

- செய்தியை வரிசைப்படுத்தி எழுதியுள்ளனர்.
- அனைத்துக் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன.
- அனைவரும் படைப்பில் பங்கு கொண்டனர்.



## பெயர் எழுதுங்கள்

- குழுச் செயல்பாடாக நடத்துங்கள்.
- பாடப்புத்தகத்தில் 56-ம் பக்கம் உள்ள செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பார்க்கச் செய்யுங்கள்.
- எந்தப் பண்டிகையுடன் தொடர்புடையது என்பதைக் கூறச் செய்யுங்கள்.
- குழுவில் கலந்துரையாடிப் படத்தில் உள்ள பண்டிகையைப் பற்றிக் குழுத் தலைவர் வெளியிடல்.
- வெளியிட்ட கருத்துகளை ஆசிரியர் உதவியுடன் மேம்படுத்திக் குறிப்பேட்டில் பதிவு செய்யட்டும்.

**படம் பார்த்துக் கருத்து கூறுதலுக்கான செயல்பாட்டுப் படிகள்**

- தனிநபர் செயல்பாடாக நடத்துதல்.
- குழந்தைகளிடம் படத்தைக் கொடுத்தல்.
- படத்தைக் கவனித்துக் கருத்துகளைத் தங்களது குறிப்பேட்டில் பதிவு செய்தல்.
- குழு பிரித்தல் (குழு பிரித்தல் உத்திகளைக் கையாளுதல்).
- கண்டறிந்த கருத்துகளைக் குழுவில் பகிர்ந்து கொள்ளுதல்.
- குழுப் பங்களிப்பை ஆசிரியர் உறுதி செய்தல்.
- குழுவாகக் கருத்துகளை மேம்படுத்தி வெளியிடல்.
- மேம்படுத்தி வெளியிட்டதை பிறகுழுக்கள் மதிப்பிடுதல்.
- குழு வெளியிட்டதை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்.
- குழந்தைகள் தங்கள் கருத்துகளை மேம்படுத்துதல்.
- படைப்புத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளுதல்.

**தொடர் செயல்பாடு**

- பத்திரிக்கையில் உள்ள படத்தொகுப்புகளைத் திரட்டி கருத்துகள் எழுதச் செய்தல்.

- பண்டிகைகள், திருவிழாக்கள் பெயர்களை குழந்தைகள் எழுதி வரச் செய்தல்

| | | |
|---|---|---|
| ஈஸ்டர் | ரம்சான் | நபிதினம் |
| பக்ரீத் | ஓணம் | குழந்தைகள் தினம் |
| பொங்கல் | கிறிஸ்துமஸ் | ஆசிரியர் தினம் |
| ஹோலி | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி | சுதந்திர தினம் |
| தசரா | முகரம் | குடியரசு தினம் |



## கருத்துக் கூறுங்கள்

- நாம் திருவிழா கொண்டாடுவதுபோல் பழங்குடிமக்களும், கொண்டாடுகிறார்கள். அது பத்திரிக்கைச் செய்தியாக வெளியிடப் பட்டுள்ளது. வாசித்து கருத்துகளைக் கூறலாமா? எனக் கூறி பாடபுத்தகச் செயல்பாட்டை அறிமுகம் செய்ய வேண்டும்.
- குழந்தைகள் பண்டிகைகளின் அடிப்படையில் குழுவாதல்.
- பத்திரிக்கைச் செய்தியை வாசிக்கச் செய்தல்.
- குழந்தைகள் பங்களிப்பை உறுதி செய்தல்.
- ஆசிரியர் குழுவில் உதவி செய்தல்.
- கண்டறிந்த கருத்துகளை வெளியிடல்.
- பிறகுழுக்கள் மதிப்பீடு செய்து, மேம்படுத்தல்.
- மீண்டும் குழுக்கள் வெளியிடுதல்.
- படைப்புத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளுதல்.

### தொடர் செயல்பாடு

- பத்திரிக்கைத் துணுக்குகள், திருவிழா / பண்டிகைகள் தொடர்பான செய்திகள், படங்கள் திரட்டி வருதல். (படைப்புத் தொகுப்பில்) சேர்த்துக் கொள்ளுதல்.

**செய்தித்தாள் வாசித்தல்**

- *தினமும் காலைக் கூட்டத்தில் செய்திகள் வாசிக்க வேண்டும்.*
- *செய்திகளை ஆசிரியர் எழுதிக் கொடுக்கக் கூடாது.*
- *குறிப்பிட்ட சில குழந்தைகள் மட்டும் செய்தி வாசித்தால் போதாது.*
- *அனைத்துக் குழந்தைகளும் இச்செயல்பாட்டில் பங்கேற்க வேண்டும்.*
- *செய்தித்தாளை குழுவுக்குக் கொடுத்து அன்றைய காலைக் கூட்டத்தில் வாசிக்க வேண்டிய செய்திகளை தேர்ந்தெடுத்து எழுதச் சொல்லலாம்.*
- *தேர்ந்தெடுத்த செய்திகளைக் குழுவில் வாசித்து ஒத்திகைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.*
- *முக்கியமான செய்திகளைக் குறித்து உரையாடுவது நல்லது.*

## பொருத்தமான சொற்கள் எழுதுங்கள்

- பாடப்புத்தகத்தில் பக்கம் 57ல் கொடுக்கப்பட்டுள்ள பொருத்தமான சொற்களைப் பாடப்பகுதியிலிருந்து வாசித்து எழுதச் செய்யுங்கள்



## விளையாடுங்கள்

- இரண்டு அல்லது மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- முதல் குழுவிலுள்ள குழந்தைகள் மூன்று எழுத்துகள் கூறட்டும். **க.அ.ப**
- இரண்டாம் குழு இதற்கு ஏற்ப சொற்களைக் கூறுதல். **கண், அம்மா, பந்து**
- சொற்களைக் கூறிய பின் வேறு மூன்று எழுத்துகளையும் அறிமுகம் செய்தல். **மா.பு.இ**
- மூன்றாம் குழு இந்த எழுத்தில் ஆரம்பிக்கும் சொற்களைக் கூறுதல். **மான், புலி, இலை**
- சொற்களைக் கூறிய பின் வேறு மூன்று எழுத்துகளைக் கூறுதல். **பா, ஆ, சா**
- அடுத்த குழு இதற்குரிய சொற்களைக் கூறுதல். **பால், ஆடு, சாட்டை**
- இவ்வாறு ஒவ்வொரு குழுவும், சொற்களைக் கண்டறிந்து கூறிய பின் எழுத்துகளைக் கூற வேண்டும். இதன் அடிப்படையில் இவ்விளை யாட்டைத் தொடர்ந்து விளையாடலாம்.
- ஒரு முறை கூறிய எழுத்தையும், சொல்லையும் மீண்டும் கூறக்கூடாது.
- இந்தச் சொல் விளையாட்டு குறிப்பிட்ட **பண்டிகை, விழா, விலங்கு, பறவை, உணவு** வகை இவற்றின் அடிப்படையிலும் உருவாக்கலாம்.

**படம் வரைவோமா**

படங்கள் வரைய வாய்ப்புகள் கொடுங்கள்.
பலூன்களின் படம் வரைந்து வண்ணம் தீட்டட்டும்.

**நூலகப் பயன்பாடு**

பள்ளி நூலகத்திலிருந்து புத்தகங்கள் எடுத்துத் திருவிழா, பண்டிகைகள் தொடர்பான கதைகள், பாடல்கள், படங்கள் போன்றன திரட்டி வாசிக்கப் போதுமான உதவிகள் செய்யுங்கள்.

## பொங்கலோ பொங்கல்

பொங்கல் பொங்கல் தைப்பொங்கல்
பொலியும் பொங்கல் தைப்பொங்கல்
அங்கை நீட்டி ஆதவனும்
அருளைப் பொழிவான் ஆதலினால்
எங்கும் ஒளியே எழுந்திடவே
எழிலார் மாரி சார்ந்திடவே
தங்கும் வளமே சார்ந்திடவே
வீட்டின் முற்றம் மெழுகிடவே
விரித்த கோலம் அழகிடவே
நாட்டின் இன்னல் நீங்கிடவே
நாளும் நலமே ஓங்கிடவே
பாட்டின் உயிராம் இறைவற்கே
படைத்துப் பூசை புரிதற்கே
ஏட்டில் சொன்ன தெப்படியோ
எல்லாம் செய்வோம் அப்படியே
தங்கப் பானை ஏற்றிடவே
தகவாய் எரியை மூட்டிடவே
பொங்கிப் பாலும் பொழிந்திடவே
பெண்கள் குலவை எழுந்திடவே
எங்கும் இன்பம் பரந்திடவே
இறைவன் பாதம் பரவிடவே
இங்கிவ் வமுதை எல்லோரும்
இனிதாய் உண்டு மகிழ்வோமே.

**ப.ஜனார்த்தனம்**

## கும்மி அடி

கும்மியடி தோழி கும்மியடி
குழுவாய்க் கூடியே கும்மியடி
நம்மால் எதுவும் முடியுமென
நம்பிக் கையோடு கும்மியடி
கல்வியே வாழ்வுக்குத் தேவைஎனச்
சொல்லி நீ ஒய்யாரக் கும்மியடி
பலவிதமான கலைகளையும்
பயின்றிட வேண்டும் கும்மியடி
பாரத நாட்டின் பெருமைகளைப்
பாடி மகிழ்ந்து நீ கும்மியடி
பாரதி போற்றிய பெண்களெல்லாம்
பாருக்குக் கண்களாம் கும்மியடி

**அ.கோவிந்தராஜு**

# அலகு மதிப்பீடு

| மண்டலங்கள் | தரம் |
|---|---|
| விளக்கம் எழுதுதல் | |
| நிகழ்ச்சி எழுதுதல் | |
| வர்ணனை எழுதுதல் | |
| படவிளக்கம் எழுதுதல் | |

## விளக்கம் எழுதுதல்

"நீங்கள் திருவிழாக் காட்சிகளைப் பற்றி படித்திருக்கிறீர்களல்லவா? அதுபோல் பள்ளியில் நடந்த ஓணவிழாக் காட்சிகளைப் பற்றி விளக்கம் எழுதுங்கள்". என்று கூறலாம்.

## நிகழ்ச்சி எழுதுதல்

அவரவர் வீட்டில் நடந்த மனம் கவர்ந்த ஒரு நிகழ்ச்சியை வரிசைப்படுத்தி எழுதச் சொல்லலாம்.

## வர்ணனை எழுதுதல்

"நீங்கள் விரும்பும் ஒரு காட்சியில் உள்ள வர்ணனைத் தொடர்களை எழுதுங்கள்". என்று கூறுங்கள்.

## படவிளக்கம் எழுதுதல்

கலைகளுடன் தொடர்புடைய படங்கள் திரட்டி, அவை பற்றி விளக்கம் எழுதவும் சொல்வீர்களல்லவா?